# உங்களிடம் இருப்பவற்றை உங்களால் செய்யக் கூடிய செயல்களில் பயன்படுத்துங்கள் (9:32-43)

*சியார்ஸி பகுதிக்குத் தங்கியிருக்கும்படி நாங்கள் வந்து சேர்ந்த சில நாட்களில், நானும் எனது மனைவியும் எங்கள் வீட்டுக்குத் தேவையான தரைவிரிப்புகள் வாங்குவதற்கென்று அவைகளை விற்கும் கடையொன்றிற்குச் சென்றோம். அங்குள்ள விற்பனையாளரைச் சந்திக்கையில், அவர் பல ஆண்டுகளாகப் பிரசங்கித்திருந்தார் என்று அறிந்தோம். அவர் எங்களுக்குத் தேவையானவற்றை எழுதத் தொடங்குமுன்னர், எனது பெயரைக் கேட்டார். நான் "டேவிட் ரோப்பர்" என்று கூறியபொழுது, அவர் சற்று நிதானித்து, தனது நினைவிலிருந்து அப்பெயரை உச்சரித்தார். பிறகு அவர், "ம்ம் ... ஏராளமாக எழுதக் கூடிய டேவிட் ரோப்பர் ஒருவர் இருக்கின்றார் ..." என்று கூறினார். "நான் தான் அவர்" என்று அறிந்து கொள்வது அவருக்கு மிகவும் அதிர்ச்சியாயிருந்திருக்கும்!*

நடபடிகளின் நமது பாடத்தில் இவ்விடத்தில் நாம், "நன்றாகச் செயல்படக் கூடிய, பேதுரு என்ற பெயருள்ள அப்போஸ்தலர் ஒருவர் இருந்தார்" என்று கூறும்படி தூண்டப்படுவோம். அதிகாரம் 5ல் இருந்து பேதுருவைப்பற்றி ஒரு சுருக்கமான குறிப்பை மட்டுமே பெற்றிருந்தோம், அதிகாரம் 8ல் கூட அவரும் யோவானும் சமாரியாவுக்கு வந்தபோது சற்றே அவரைப் பற்றிப் படித்தோம். அதிகாரங்கள் 6 மற்றும் 7ல் ஸ்தேவானே முக்கியப்படுத்தப்பட்டார், மற்றும் அதிகாரம் 8ல் பிலிப்புதான் முக்கிய பாத்திரமாக இருந்தார். அதிகாரம் 9ல் கூட இது வரைக்கும் சவுலின் மனமாற்றம், அவரது தொடக்க கால ஊழியம் ஆகியவையே வலியுறுத்தப்

பட்டுள்ளன. நாம் 9:32க்கு வருகையில், மறுபடியும் பேதுருவை நோக்குகின்றோம்.

பேதுருவின் அப்போஸ்தல ஊழியத்தின் மிக முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்றிற்கு அறிமுகமாக 32 முதல் 43 வரை உள்ள வசனப்பகுதிகள் இருக்கின்றன: புறஜாதிகளுக்கு முதன் முறையாக சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல். அதிகாரம் 10ல், செசரியாப் பட்டணத்தில் வாழ்ந்த கொர்நேலியுவுக்கு "நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்று மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பி" (வ. 5) என்று கூறப்படவிருந்தது. யோப்பாவில் பேதுரு என்ன செய்து கொண்டிருந்தார்? அங்கிருந்த சகோதரர்கள், லித்தாவிலிருந்த அவரை, தொற்காள் மரித்த போது அழைத்திருந்தார்கள். பேதுரு ஏன் லித்தாவில் இருந்தார்? அவர் பலஸ்தீன முழுவதிலும் சென்று பிரசங்கம், போதனை செய்து கொண்டிருந்தார், மற்றும் சபைகளைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்தார் - இது, நமது வேதபாடப் பகுதியின் முதல் வசனத்திற்கு நம்மைக் கொண்டு வருகின்றது. 9:32-43ல் உள்ள நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் இயல்பாகவே அடுத்த வரும் நிகழ்ச்சிக்கும், அதிகாரம் 10க்கும் வழி வகுப்பவையாய் உள்ளன.

அதிகாரம் 9ன் நிறைவுப் பகுதியானது கொர்நேலியுவின் மனமாற்றத்திற்கு வழி நடத்துவதால், நாம் அதிகாரம் 10ஐ விரைவாய்ப் படிக்கும்படி தூண்டப்படலாம். ஆயினும், இவ்வசனப்பகுதியில் அடுத்த அதிகாரத்திற்கான தயாரிப்பைப் பார்க்கிலும் அதிகமானவற்றை நான் காணுகின்றேன். சபைகள் தங்களின் துன்பம் நிறைந்த பாதை மற்றும் விசுவாசத்தை எவ்விதம் பகிர்ந்து கொண்டன என்பதற்கான ஆதி சபையாரின் செயல்பாடுகள் பற்றிய சிறு குறிப்பொன்றை நாம் இவ்வசனங்களில் பெறுகின்றோம். இதை நான் இன்னும் சற்று நெருக்கமாய்க் காணுகையில் இன்னொரு சிந்தனையும் எழுகின்றது: கிறிஸ்தவர்கள் தங்களிடம் இருப்பவற்றைக் கர்த்தருக்கென்று தங்களால் செய்யக் கூடிய செயல்களில் பயன்படுத்தினார்கள். நான் எதை அர்த்தப்படுத்துகிறேன் என்பதை உங்களுக்குக் காண்பிக்கிறேன்.

# பேதுரு தம்மிடத்தில் இருந்தவற்றைப் பயன்படுத்தினார் (9:32-35)

யாரோ ஒருவர், 9:32-11:18ஐ "பேதுருவின் நடபடிகள்" என்று அழைத்திருக்கின்றார். நமது வேதபாடப் பகுதியான 9:32-43, "பேதுரு போய் எல்லாரையும் சந்தித்து வருகையில், அவன் லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான்" என்று தொடங்குகின்றது. "சுவிசேஷப் பிரயாணம்" என்ற சொற்றொடரைப் பொதுவாக நாம் பவுலுடன் மட்டுமே இணைத்துப் பயன்படுத்துகின்றோம், ஆனால் அப். நட. புத்தகத்தில் மற்றவர்களும் சுவிசேஷப் பிரயாணத்தை மேற்கொண்டிருந்தார்கள் (8:1, 4; 11:19, 20). சுவிசேஷகனாகிய பிலிப்பு, வடக்கே சமாரியாவுக்கும், தெற்கே காசா சாலைக்கும், தென்மேற்கே ஆசோத் பட்டணத்திற்கும், மற்றும் வடக்கே செசரியாவின் கடற்கரை பகுதிகளுக்கும் சுவிசேஷப் பயணமாகச் சென்றார் (8:5, 26, 40). பேதுருவும் யோவானும் முன்னதாகச் சமாரியாவினூடாக ஒரு சுவிசேஷப் பயணம் சென்றிருந்தனர் (8:25). இப்பொழுது பேதுரு பலஸ்தீனத்தில் ஒரு சுவிசேஷப் பயணத்தை மேற்கொண்டிருந்தார் (வசனம் 32ல் "போய் எல்லாரையும் சந்தித்து வருகையில்" என்பது இதற்கு முந்திய வசனத்தில் கூறப்பட்ட யூதேயா, கலிலேயா மற்றும் சமாரியா என்ற பகுதிகளைக் குறிக்கின்றது).

பேதுரு தம்மிடம் இருந்தவற்றைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார். கர்த்தரை அறியவும், அவருடைய உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாயிருக்கவும் அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. அவர் ஏவுதலினால் பேசவும், குணமாக்கவும் வல்லமை பெற்றிருந்தார். இந்தப் பயணத்தை அவர், தம்மிடம் இருந்தவற்றைக் கர்த்தருக்கென்று தாம் செய்ய முடிந்தவைகளில் வெளியாக்கப் பயன்படுத்திக் கொண்டார். அவர் சகோதரர்களைப் பலப்படுத்தவும்,[1] இழந்து போனதை இரட்சிக்கவும் (9:35, 42) விரும்பினார்.

"பேதுரு போய், எல்லாரையும் சந்தித்து வருகையில், அவன் லித்தா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான்" (வ. 32). லித்தா என்பது எருசலேமுக்கு வடமேற்கில் சுமார் 26 மைல் தூரத்தில், யூதேயாவின் மலையடிவாரத்தில்

அமைந்த வளமான சமவெளிப் பகுதியில் இருந்த ஒரு ஊர் ஆகும் (1 நாளா. 8:12; நெகே. 11:35). பேதுரு லித்தா ஊருக்கு வந்திருந்ததால், அவர் எருசலேமைக் கடந்து வந்திருக்க வேண்டும். அவர் லித்தா ஊருக்கு வந்து சேர்ந்தபோது, அங்கு வாழ்ந்த பரிசுத்தவான்களைக் கண்டார். "பரிசுத்தவான்கள்" என்பது கிறிஸ்தவர்களைக் குறிப்பிடும் இன்னொரு வழிமுறை யாகும். இங்கிருந்த பரிசுத்தவான்களில் சிலர், எருசலேமிலிருந்து சிதறடிக்கப்பட்டவர்களாயிருந்திருக்கலாம் (8:1, 4). மற்றவர் கள், எருசலேமிலிருந்து வந்து "எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தவர்களால்" (8:4) மனமாற்றமடைந் திருக்கலாம். இன்னும் மற்ற சிலர், பிலிப்பு ஆசோத் முதல் செசரியா வரை "சகல பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது" மனமாற்றமடைந்திருக்கலாம் (8:40).

பேதுரு, லித்தாவில் இருந்த பரிசுத்தவான்கள் மத்தியில் ஊழியம் செய்து கொண்டிருக்கையில், "ஐனேயா என்னும் பேருள்ள ஒரு மனுஷனைக் கண்டான்" (9:33ஆ). மருத்து வரான லூக்கா அந்த மனிதனின் நிலையை வெளிப்படையாய் அறிவித்தார்: "எட்டு வருஷமாய்க் கட்டிலின் மேல் திமிர்வாத முள்ளவனாய்க் கிடந்த ஐனேயா" (9:33அ). எட்டு வருஷங் களுக்கு முன்பு ஐனேயாவால் நடக்க, வேலை செய்ய முடிந் திருந்து, வாழ்க்கையை சந்தோஷமாய் அனுபவித்திருந்தார். ஒரு நாள் அவர் தமது படுக்கையை விட்டு எழும்போது, அன்றும் மற்ற நாட்கள் போன்றே இருக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்தார். ஆனால் அப்படியிருக்கவில்லை. என்ன நடந்த தென்று நாம் அறிவதில்லை. ஒருவேளை ஒரு விபத்து ஏற்பட்டு அவரது முதுகெலும்பு முறிந்திருக்கலாம், அவரது நரம்பு மண்டலத்தை தாக்கிய நோயால் அவர் பாதிக்கப்பட்டிருக்க லாம். காரணம் எதுவாயிருப்பினும், அவர் திமிர்வாத நோயால் பாதிக்கப்பட்டு, ஊனமுற்றவரானார். எட்டு வருடங்களாக ஐனேயா மற்றவர்களைச் சார்ந்தே வாழ்ந்து வந்தார்.

பேதுரு செய்த அற்புதங்களென்று பதிவு செய்யப்பட்டிருப் பவைகளில் முதலாவதானது, அவர் "தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனை" (3:2) குணப்படுத்தி யிருந்த நிகழ்ச்சியாகும். இப்பொழுது இந்த அப்போஸ்தலர் அதே விதமான அறைகூவலை எதிர் கொண்டார். அவர் சற்றும் தயங்கவில்லை. பேதுரு அவனைப் பார்த்து: "ஐனேயாவே,

இயேசு கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்; நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக் கொள்'' என்றான் (9:34அ). வழக்கம் போலவே இதிலும் நன்மதிப்பைப் பேதுரு தமக்கென்று வைத்துக் கொள்ளவில்லை. "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறான்'' (4:10). இயேசு தம்முடைய ஊழியத்தின்போது, ஒரு திமிர்வாதக்காரனிடம், "நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப் போ" (மத். 9:6) என்று கூறியிருந்தார் - அந்த மனிதரும் கீழ்ப்படிந்திருந்தார்! ஐனேயா ஏற்கனவே தமது வீட்டில்தான் இருந்தார், எனவே பேதுரு அவரிடத்தில், "நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக் கொள்" என்று மட்டும் கூறினார்.

ஒருமுறை ஒரு தகப்பனார் ஆழ்ந்த யோசனையுடன், "அப். 9ல் வரும் திமிர்வாதக்காரரைப் போலவே எனது பிள்ளைகளும் இருக்க விரும்புகின்றேன்'' என்று கூறினார். பிறகு அதன் அர்த்தம் என்ன என்பதை அவர் விளக்கிக் கூறினார்: "எழுந்து உங்கள் படுக்கையைப் போட்டுக் கொள்ளுங்கள் என்று எனது பிள்ளைகளிடம் ஒவ்வொரு முறையும் நான் சொல்லும் போதெல்லாம் ஒன்றும் நடப்பதில்லை.'' அந்த நாட்களில் (அநேக நாடுகளில் இன்றும் கூட) இரவில் பாய்கள் தரையில் விரிக்கப்பட்டு, அடுத்த நாள் காலையில் அவைகள் சுருட்டி வைக்கப்படுவது வழக்கமாகும். ஐனேயாவின் படுக்கையானது எட்டு வருடங்களாகச் சுருட்டி வைக்கப்படாதிருந்தது. வருடக்கணக்கில் அவர் அசைய முடியாதபடி அதன் மேல் படுத்துக் கிடந்திருந்தார். பேதுரு அவரை எழும்பும்படியும், அவரது சொந்தக் கால்கள் இரண்டினாலும் நிற்கும்படியும், ஏறக்குறைய பத்தாண்டளவாய் அவர் சிறைப்பட்டுக் கிடந்திருந்த படுக்கையைச் சுருட்டி வைக்கும்படியும் அவருக்குக் கூறினார்.

இன்றைய நாட்களில் ''அற்புதங்கள்'' என்னப்படுபவை போலின்றி, வேதாகமத்தின் அற்புதங்கள் உடனடியானதாக, முழுமையானதாக, நம்பக் கூடியவைகளாக இருந்தன. ஐனேயா குணமாக்கப்பட்ட நிகழ்ச்சியும் கூட இதற்கு விதி விலக்கல்ல: "உடனே அவன் எழுந்திருந்தான்" (9:34ஆ). ஐனேயா எவ்வளவு சந்தோஷத்தை உணர்ந்திருப்பார்! அந்தப் பகுதி முழுவதிலும் எவ்வளவு மனவெழுச்சி பரவியிருக்கும்! ''லித்தாவிலும்

*சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக் கண்டு" (வ. 35அ). சாரோன் என்பது மத்திய தரைக்கடலின் ஓரமாய் யோப்பா முதல் செசரியா வரையும் பரவியிருந்த வளமான சமவெளியும்,[2] அழகிய காட்டு மலர்களுக்குப் பெயர் பெற்ற ஒரு இடமும் ஆகும் (உன்ன. 2:1). ஐனேயா நன்கு அறியப்பட்ட வராயிருந்தார், அவருக்கு நடந்ததை அப்பகுதியில் இருந்த யாவரும் கேள்விப்பட்டு ஆச்சரியப்பட்டார்கள்.*

*வசனத்தை உறுதிப்படுத்துவதே அற்புதங்களின் அடிப் படை நோக்கமாகும் (எபி. 2:3, 4). லித்தா மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் இருந்த மக்கள் ஐனேயா நின்று நடந்ததைக் கண்டபொழுது, அவர்கள் "கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர் களாகி" (9:42),[3] "கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்" (9:35ஆ). அவர்களது கண்களை, நபரிடமிருந்து (பேதுரு தம்மிடமிருந்து) வல்லமையினிடம் (இயேசுவினிடம்) திருப்பப் பேதுருவால் முடிந்திருந்தது - பலர் கிறிஸ்தவரானார்கள்! மனிதர்கள் தங்களிடம் இருப்பவற்றை, கர்த்தருக்கென்று தங்களால் முடிந்தவற்றைச் செய்வதற்கு பயன்படுத்தும் போது, கர்த்தர் அவர்களது முயற்சிகளை ஆசீர்வதிக்கின்றார்!*

## *இரண்டு சீஷர்கள் தங்களிடம் இருந்தவற்றைப் பயன்படுத்தினார்கள் (9:26-38)*

*இதற்குப் பின், காட்சியானது அங்கிருந்து மேற்கில், பன்னிரெண்டு மைல் தொலைவில் இருந்த கடலோரப் பட்டணமாகிய யோப்பாவுக்குத் (யோசு. 19:46) திரும்பு கின்றது. சாலமோனின் நாட்களில், கேதுரு மரங்கள் தீருவில் இருந்து யோப்பாவுக்குக் கடலில் மிதக்கவிட்டுக் கொண்டு வரப்பட்டு, பிறகு அங்கிருந்து எருசலேமுக்குத் தரை வழியாய்க் கொண்டு போகப் பட்டு, அங்கு ஆலயம் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன (2 நாளா. 2:16). தீர்க்கதரிசியான யோனா தர்ஷீசுக்குச் செல்வதற்குக் கப்பல் ஏறுவதற்காக யோப்பாவுக்கு ஓட வேண்டியிருந்தது (யோனா 1:3). இப்பொழுது யோப்பாவில் கர்த்தருடைய சபை ஒன்று இருந்தது, அநேகமாக லித்தாவில் சபை ஆரம்பிக்கப்பட்ட அதே*

*வேளையில் இங்கும் ஆரம்பிக்கப் பட்டிருக்கலாம். அங்கிருந்த உள்ளூர் சபையின் ஒரு உறுப்பினர் மீது மட்டும் நமது கவனம் இருக்கின்றது: "யோப்பா பட்டணத்தில் கிரேக்குப் பாஷை யிலே தொற்காள் என்று அர்த்தங் கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியை களையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள்" (வ. 36). தபீத்தாள் என்பது அப்பெண்மணியின் அர மாயிக் மொழிப்பெயராகும். "தபீத்தாள்" மற்றும் "தொற்காள்" ஆகிய இரண்டு பெயர்களுக்குமே "வனப்புள்ள சிறுமான்" என்பதே அர்த்தமாகும். மான் குடும்ப வகையைச் சேர்ந்த விலங் குகளில் "gazelle" எனப்படும் இது மிக அழகும், மென்மையான நோக்கும் உடையதாகும். F.F. புரூஸ் அவர்கள், வசனம் 36ன் நிறைவுப் பகுதியை, ''அவள் நல்ல காரியங்கள் மற்றும் இரக்கமுள்ள செயல்களைச் செய்வதிலேயே தனது நேரம் முழுவதையும் செலவிட்டாள்" என்று மொழிபெயர்த்துள்ளார்.*

*உள்ளூர் சபையிலும், சமூகத்திலும் தபீத்தாள் எல்லோ ராலும் அன்பு காட்டப்பட்டுப் பாராட்டப்பட்டாள், ஆனால், ''அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள்'' (வ. 37அ). கெட்ட மனிதர்களைப் போலவே நல்ல மனிதர்களும் மரிக்கின்றார்கள் (எபி. 9:27). சபை தொடங்கிப் பன்னிரெண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் ஆகியிருந்த அச்சமயத்திற்கு முன்னரே கிறிஸ்துவின் சரீரத்திலிருந்த பல உறுப்பினர்கள் அநேகமாய் இறந்திருப்பார்கள், ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான ஒருவருடைய இயற்கை மரணம் பற்றிய விபரக் குறிப்பு இவ்விடத்தில் தான் முதன்முறையாகத் தரப்படுகின்றது.[4] நாம் ''அவளைக் குளிப்பாட்டி, மேல் வீட்டிலே கிடத்தி வைத்தார்கள்" (9:37அ) என்று வாசிக்கின் றோம். எருசலேமில் ஒருவர் மரித்தால், அதே நாளில் சவ அடக்கம் நடைபெற வேண்டும், ஆனால் கிராமப் பகுதிகளில் அப்படிப்பட்ட நிபந்தனை எதுவும் இருக்கவில்லை (5:6, 10ஐக் காணவும்) எப்படியிருந்தாலும், அவர்கள் அவளது உடலை அடக்கம் பண்ணத் தயார் செய்து,[5] அதை மேல் வீட்டில் வைத்து, அவளை அறிந்தவர்கள் வந்து பார்க்கவும், ஒன்று கூடி அழவும் வசதி செய்திருந்தார்கள்.*

*இவையெல்லாம் நடந்து கொண்டிருக்கையில், பன்னி ரெண்டு மைல் தூரத்தில் உள்ள லித்தாவில்தான் பேதுரு*

இருந்தார் என்ற செய்தி யோப்பாப் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தது. அங்கு ஐனேயா குணமாக்கப்பட்டது பற்றிய செய்தியும் வந்திருக்கலாம். அப்போஸ்தலரை அழைத்து வரும்படி ஆளனுப்பச் சகோதரர்கள் முடிவு செய்தார்கள். “யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்திலிருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள்” (வ. 38).

சீஷர்கள் பேதுருவுக்குச் சொல்லியனுப்பியது ஏன் என்று நான் உங்களுக்குக் கூற விரும்புகின்றேன்: “தாமதமில்லாமல்” என்ற சொற்றொடரானது தொற்காள் அடக்கம் பண்ணப் படுவதற்கு முன்னதாக[6] அவர் யோப்பாவுக்கு வரவேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள் என்பதையே அநேகமாய்க் குறிக்கின்றது - அந்தச் சூழ்நிலையில் அடக்கம் பண்ணப்படுதல் என்பது தாமதப்படுத்தக் கூடாததாயிருந்தது - ஆனால் அடக்கம் பண்ணப்படுவதற்கு முன்னர் அவர் ஏன் அங்கு வரவேண்டும் என்பதை அச்சொற்றொடர் குறிப்பிடுவதில்லை. அவர்கள், தொற்காளை மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கச் செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள் என்ற கருத்து பொருத்த முடையதாகக் காணப்படவில்லை. அதுவரை நடந்திருந்த செயல்பாடுகளின் பதிவுகளின்படி, அப்போஸ்தலர்கள் மரித்தோரிலிருந்து யாரையும் உயிர்ப்பித்திருக்கவில்லை.[7] ஸ்தேவான் உயிரோடு எழுப்பப்பட்டிருந்ததில்லை, ஆகவே தொற்காள் உயிரோடு எழுப்பப்பட வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கக் காரணம் எதுவும் இருந்ததில்லை. மாறாக, அவர் சவ அடக்கத்தின் போது பிரசங்கிப்பதற்காக அவர்கள் அவரை அவசரப் படுத்தி வரச் சொன்னார்கள் என்பது விளையாட்டுத் தனமாய்த் தோன்றுகின்றது! ஒருவேளை, துக்கப்பட்டுக் கொண்டிருந்த திரளான அந்தக் கூட்டத்தாருக்குப் பேதுரு வந்து ஆறுதல் அளிக்கும்படி அவர்கள் விரும்பியிருக்கலாம். சீஷர்களின் நோக்கம் எதுவாயிருப்பினும், அந்த மனிதர்கள், பேதுரு “தம்மிடத்தில் இருந்தவைகளைத் தாம் செய்யக் கூடிய செயல்களில் பயன்படுத்துவதற்காக” விரைந்து வரும்படி வற்புறுத்தினார்கள்.

பேதுருவை அழைத்துச் செல்ல வந்த அந்த இரண்டு

மனிதர்கள் மேல் கவனத்தைச் சற்று திருப்ப நான் விரும்பு கின்றேன். "சீஷர்கள் ... இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள்.'' பேதுருவினிடத்தில் இருந்தது இந்த மனிதர்களிடத்தில் இல்லை. பேதுரு என்ன செய்ய வேண்டு மென்று இவர்கள் விரும்பினார்களோ, அந்தச் செயலை அவர்கள் செய்ய முடியாததாயிருந்தது.[8] மாறாக கர்த்தருக் கென்று பயன்படுத்துவதற்கு அவர்கள் சில விஷயங்களைப் பெற்றிருந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் இரண்டு கால்களை மற்றும் ஒரு வாய் ஆகியவற்றை உடையவர்களா யிருந்தார்கள். அவர்கள் பேதுருவிடம் செல்வதற்கும், வரும்படி அவரைக் கெஞ்சுவதற்கும் தங்களிடம் உள்ளவற்றைப் பயன்படுத்த முடிந்தது.

நம்மில் சிலர், கர்த்தருக்கென்று மாபெரும் செயல்கள் செய்ய முடியாததால், ஒன்றுமே செய்யாமல் இருக்கின்றோம். நாம் பேதுருவைப் போல் இருக்க முடியாவிட்டால், நாம் ஒன்றுமற்றவர்களாகி விடுகிறோம். பெயர் அறியப்படாத அந்த இரண்டு சீஷர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள். தேவன், அவருக்கென்று பயன்படுத்துவதற்காக, நம் ஒவ்வொரு வருக்கும் ஏதோ ஒன்றைக் கொடுத்திருக்கின்றார், நம்மில் பலர், நமது கால்களை, ஒரு நண்பருடைய வீட்டிற்குச் செல்லவும், நமது குரல்களை, இயேசுவைப் பற்றி அந்த நண்பரிடம் கூறவும் பயன்படுத்த முடியும். தங்களால் நிறைவேற்ற முடியாத செயல்பாட்டை அந்த இரு மனிதர்களும் எதிர் கொண்டது போல நாமும் எதிர்கொண்டால், அப்பணியை செய்யக்கூடிய மற்றவர்களிடத்திலிருந்து உதவியைப் பெறுவதற்கு, நாம் நமது கால்களையும், குரல்களையும் பயன்படுத்த முடியும்!

அவ்விரண்டு மனிதர்களும் தங்கள் சரீரப் பிரகாரமான அந்தத் திறமைகளுடன் கூட, இயல்பான விருப்பம் என்ற விசேஷ குணத்தைப் பெற்றிருந்தார்கள் என்பதையும் நான் குறிப்பிட வேண்டும்; கர்த்தருக்கென்று சிலவற்றைச் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்ட போது, அவர்கள் அதைச் செய்ய இணங்கினார்கள். தங்களிடம் கேட்கப் படுகின்ற செயல்கள் யாவற்றையும் செய்து விடும் இயல்புடை யவர்கள், மிகவும் அரிய குணம் உள்ளவர்களாவார்கள் - இப்படிப்பட்டவர்கள் சபையில் அங்கம் வகிப்பதென்பது சபை முன்னோடிகளுக்கு சிலிர்ப்பூட்டும் அனுபவமாயிருக்கின்றது.

*"இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்" என்பதே இயேசு மனிதர்களிடத்தில் கூறியிருந்த பாராட்டுரைகளிலேயே மிகவும் உயர்ந்ததாக இருந்தது (மாற். 14:8).*

*மனிதர்கள் தங்களிடம் இருந்தவற்றைத் தங்களால் செய்யக் கூடிய செயல்களுக்கு மீண்டும் ஒருமுறை பயன்படுத்தியதால், தேவன் அவர்களது முயற்சிகளை ஆசீர்வதித்தார்: "பேதுரு எழுந்து அவர்களுடனே போனான்" (வ. 39). கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் திறமைகளை - அது எவ்வளவு பெரியதோ சிறியதோ, எப்படியிருப்பினும் அதை - கர்த்தருக்கென்று பயன்படுத்தினால் எவ்வளவு ஆச்சரியமான சாதனைகள் விளையும்!*

## *தொற்காள் தன்னிடத்தில் இருந்தவற்றைப் பயன்படுத்தினாள் (9:36, 39-42)*

*பல மணி நேரங்கள் கடந்த பிறகு, பேதுருவும் அவ்விரு மனிதர்களும், தொற்காளின் சரீரம் கிடத்தப்பட்டிருந்த வீட்டிற்கு வந்தனர். "அவன் (பேதுரு) போய்ச் சேர்ந்த பொழுது, அவர்கள் அவனை மேல் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள்" (வ. 39ஆ). தொற்காளின் "நற்கிரியைகளையும் தருமங்களையும்" (வ. 36) பெற்றுக் கொண்ட கூட்டத்தாரால் அந்த அறை நிறைந்திருந்தது. "அப்பொழுது விதவைகளெல்லா ரும் அழுது,[9] தொற்காள் தங்களுடனே கூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து, அவளைச் சூழ்ந்து நின்றார்கள் (வ. 39இ). அவள் அவர்களுக்கு செய்து கொடுத்திருந்த உடைகளை அவர்கள் அணிந்து கொண்டிருந்தார்கள் என்பதையே மூல பாஷையின் சொற் றொடர் அர்த்தப்படுத்த முடிகின்றது. அவர்கள் தங்கள் உடை களைச் சுட்டிக் காட்டி, "இதை அவள் செய்து கொடுத்தாளே ...! இதையும் ... இதையும் அவள் தானே செய்து கொடுத்தாள்!" என்று பேதுருவினிடத்தில் புலம்பியதை என்னால் காண முடிகின்றது!*

*தொற்காளிடத்தில் பல திறமைகள் இல்லாதிருந்திருக்க லாம். "என்னால் செய்ய முடிந்தது மிகவும் கொஞ்சம்*

என்பதால், நான் எதையும் செய்யாமலிருந்து விடுவேன்” என்று அவள் வாதித்திருக்க முடியும். ஆயினும் கர்த்தருக்கென்று பயன்படுத்துவதற்குச் சில சாதனங்கள் அவளிடமிருந்தன. அவளிடத்தில் ஒரு ஊசி, சில துணிகள், கொஞ்சம் நூல் மற்றும் தைக்கும் திறமை ஆகியவை இருந்தன. மிக முக்கியமாக, நம் எல்லாரிடத்திலும் இருக்கத் தேவையான ஒரு தன்மை அவளிடம் இருந்தது. வசனம் 38 மற்றும் 39ல் குறிப்பிடப்பட்ட இரண்டு மனுஷர்களும், தங்களிடத்தில் கூறப்பட்டவைகளைச் செய்து முடித்தல் என்ற விசேஷித்த குணமுடையவர்களாய்க் காணப்பட்டனர், ஆனால் தொற்காள், இதைக் காட்டிலும் அதிக விசேஷித்த குணம் ஒன்றை உடையவளாயிருந்தாள்: அவள், தன்னிடத்தில் யாரும் கேட்டுக் கொள்வதற்காகக் காத்திருக்காமல், தான் செய்ய கூடியவற்றை தானாகவே செய்பவளாய் இருந்தாள்! தொற்காள் எளிதில் உணரக் கூடிய மற்றும் இரக்கவுணர்வுள்ள இருதயத்தைக் கொண்டிருந்தாள். யாருக்கு உடை தேவை என்பதைக் காண, அவள் சுற்றிலும் பார்த்தாள். அந்த சமுதாயத்தில் தனது போஷகர் மற்றும் பாதுகாவலரை இழந்த நிலையில் இருந்த விதவையின் நிலையானது மிகவும் பலவீனமானதாயிருந்தது. தொற்காள் தன்னிடம் இருந்தவற்றைத் தன்னால் செய்யக் கூடிய செயல்களுக்குப் பயன்படுத்தினாள்; விதவைகளுக்கும், தேவையில் இருந்த மற்றவர்களுக்கும் அவள் துணிகளைத் தைக்கத் தொடங்கினாள்.

நாம் அறிந்த வரையிலும், தொற்காள், வகுப்புகளில் போதித்ததில்லை, அற்புதங்கள் செய்ததில்லை, “முக்கியமான திட்டம்” எதற்கும் பொறுப்பாளியாயிருந்ததில்லை. நீங்கள் யோப்பாவில் இருந்த சபைக்குப் போயிருந்தால், அவள் அமைதியாக ஓரிடத்தில் உட்கார்ந்திருந்ததை நீங்கள் பார்த்திருக்கவே முடியாது. அவளுடைய ஊழியத்தைப் பற்றி நீங்கள் அவளிடத்தில் கேட்க நேரிட்டிருந்தால், அவள் அநேகமாய்த் தன் தோள்களைக் குலுக்கி, “ஏதோ கொஞ்சம் தைக்கிறேன்!” என்று தான் கூறியிருப்பாள். ஆயினும், அவள் மரித்தபோது, முன் எப்போதும் இல்லாத வகையில் யோப்பா வில் அதிகமாய்க் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் கிறிஸ்துவின் ஆவியைக் கிறிஸ்தவர்கள் வெளிப்படுத்தும் விஷயம் பற்றிச் சில

சமயங்களில் நாம் குறைவாக மதிப்பிடுகின்றோம். பவுல், “ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும் ... நன்மை செய்யக் கடவோம்” (கலா. 6:10) என்று எழுதினார். ‘‘மாசில்லாத சுத்தமான பக்தியை’’ விளக்கிக் கூறும்போது யாக்கோபு “திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதே’’ அந்த பக்தி தொடங்கும் இடமாகும் என்று கூறினார் (யாக். 1:27). இப்படிப்பட்ட ஊழியத்தின் மூலம் அடையக் கூடிய நிறை வான விளைவானது தொற்காளின் வரலாற்றில் அளவீட்டு முறையில் காணப்படுகின்றது. அவளது வரலாற்றைக் கூறுவதற்கு ஏழு வசனங்கள் மட்டுமே தேவைப்படுகின்றன, ஆனால் இந்த ஏழு வசனங்களானவை காலங்களினூடே பத்தாயிரக்கணக்கான மக்கள் தங்கள் திறமைகளை ஏழை களுக்கு உதவுவதற்கென்று பயன்படுத்துவதற்கு அவர்களை ஏவியிருக்கின்றன! நம்மிடம் இருப்பவற்றை நம்மால் செய்ய கூடியவைகளில் நாம் பயன்படுத்தும்போது, தேவன் நமது முயற்சிகளை எவ்வளவாய்ப் பலுகச் செய்ய முடியும் என்பது வியப்புக்குரியதாய் இருக்கின்றது!

இயேசுவுக்காக நீங்கள் எதுவும் செய்ய முடியாதென்று நினைக்கின்றீர்களா? உங்களால் தைக்க முடியுமா? உங்களால் சமைக்க முடியுமா? உங்களால் பாத்திரங்களைக் கழுவ முடியுமா? உங்களால் தரைகளைக் கூட்ட முடியுமா? உங்களால் பழுது நீக்க முடியுமா? உங்களால் புல் வெட்ட முடியுமா? உங்களால் இலைகளைக் கழித்துப் போட முடியுமா? மனம் புண்பட்ட நிலையில் இருப்பவர்களின் தோள்களில் ஆறுதல் கூறக் கரங்களைப் போட உங்களால் முடியுமா? நோயாளிகளுடன் உங்களால் அமர்ந்திருக்க முடியுமா? ஒரு கப் குளிர்ந்த நீரைக் கொடுக்க உங்களால் முடியுமா? இயேசு, “சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் ... ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான்’’ (மத். 10:42) என்று கூறினார். உங்களிடம் இருப்பவற்றை - அது எதுவாயிருந்த போதிலும் - உங்களால் செய்ய முடிந்தவற்றில் பயன்படுத்துங்கள்.தேவன் உங்கள் முயற்சிகளை ஆசிர்வதிப்பார்!

பேதுரு தம்மிடம் இருந்தவற்றைப் பயன்படுத்த வேண்டிய நேரம் - தொற்காளை மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்க

வேண்டிய நேரம் - வந்தது. அவர் ஏன் தொற்காளை உயிர்ப்பிக்க முடிவு செய்தார் என்று நான் அறியவில்லை. அவள் ஒரு நல்ல பெண்ணாக இருந்தாள், ஆனால் அதற்கு முன்னும் நல்ல மனிதர்கள் இறந்திருந்து, உயிர்ப்பிக்கப்படாமல் இருந்தார்கள். அந்த நேரத்தில் தொற்காளை உயிர்ப்பித்த நிகழ்ச்சியானது தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றியது என்று மட்டுமே நாம் கூறமுடியும். அந்தோனி லீ ஆஷ் பின்வருமாறு கூறினார்:

> ஸ்தேவானோ (7:59) அல்லது யாக்கோபுவோ (12:2) உயிர்ப்பிக்கப்படாமல், தொற்காள் உயிர்ப்பிக்கப் பட்டது ஏன்? என்று ஒருவர் வியப்படைகின்றார். இதற்கான தெய்வீக காரணம் எதுவாயிருப்பினும், அவர்கள் தேவனுடைய மாபெரும் மகிமைக்கென்றிருந்தார்கள். ஒருவேளை, சரீர மரணத்தைப் பற்றி நாம் அதிகமாய்க் கவலைப்படுவதாலும், இயேசுவின் உயிர்த்தெழுதலின் மூலம் மரணத்தின் மேல் கிடைத்த வெற்றியை ஓரளவு மட்டுமே நம்புவதாலும்தான் இந்தக் கேள்வி எழும்புகின்றது.

அப்போஸ்தலர் ஒருவர், மரித்தோரிலிருந்து ஒருவரை உயிரோடு எழுப்பிய நிகழ்ச்சி நாம் அறிந்த வரையிலும் இதுவே முதலாவதாகும். அதை எவ்விதம் செய்வதென்பதைப் பேதுரு எப்படி அறிந்தார்? "மரித்தோரை உயிர்ப்பித்தல் எப்படி?" என்ற விளக்கப் புத்தகம் எதுவும் அவரிடம் இல்லை, ஆனால் இயேசு, மரித்தோரை உயிரோடெழுப்பிய ஒரு நிகழ்ச்சி அவரது நினைவில் இருந்தது.[10] யாவீருவின் மகளை இயேசு உயிரோடெழுப்பிய நிகழ்ச்சிக்கும் (மாற். 5:21-43; லூக். 8:40-56), பேதுரு தொற்காளை உயிரோடெழுப்பிய நிகழ்ச்சிக்கும் இடையில் உள்ள ஒற்றுமைகள் தற்செயலானவைகள் என்று கூறிவிட முடியாது.[11] "இயேசு முதலாவது என்ன செய்தார்? ஓ, ஆமாம் … அவர் அறையிலிருந்து மக்களை வெளியே அனுப்பினார்"[12] என்று பேதுரு எண்ணியதை என்னால் கற்பனை செய்ய முடிகின்றது. எனவே, "பேதுரு எல்லாரையும் வெளியே போகச் சொல்லி …" (வ. 40அ). எல்லாரும் வெளியே போன பிறகு, பேதுரு "முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி …" (வ. 40அ). இயேசு ஜெபிப்பதற்கு முழங்காற்படியிடவில்லை, ஆனால் இயேசு வல்லமையாய் இருந்தார், பேதுரு வல்லமையைத் தேடுபவராக இருந்தார். எழுந்து நின்ற பேதுரு, இயேசு அடுத்து

என்ன செய்தார் என்பதை கருத்தில் கொண்டார். "எனக்கு நினைவு வருகின்றது. அவர், 'தாலீத்தா கூமி!' என்று கூறினார் ('சிறு பெண்ணே எழுந்திரு!' என்பதே இதன் அர்த்தமாகும்)" (மாற். 5:41; லூக். 8:54). பேதுரு, சரீரத்தின் புறம் திரும்பி, "தபீத்தாளே, எழுந்திரு" (வ. 40இ) என்று கூறினார் (அரமாயிக் மொழியில் சிறுபிள்ளையே [தலீத்தா] என்பதற்கும் "தபீத்தாளே" என்பதற்கும் இடையில் ஓர் எழுத்துதான் வேறுபாடாய் இருக்கின்றது).

இயேசு, ''சிறு பெண்ணே எழுந்திரு!'' என்று கூறிய பொழுது, "உடனே சிறுபெண் எழுந்து நடந்தாள்" (மாற். 5:42; லூக். 8:55). அதேபோல், தொற்காள், "தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள்" (வ. 40ஈ).[13] இயேசு அந்தச் சிறு பெண்ணின் கையைப் பிடித்து எழுப்பினார் (மாற். 5:41; லூக். 8:54), பேதுரு ''அவளுக்கு [தொற்காளுக்கு]க் கை கொடுத்து அவளை எழுந்திருக்கப் பண்ணினார்" (வ. 41அ). பேதுரு "பரிசுத்தவான்களையும், விதவைகளையும்[14] அழைத்து அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்திய'' (வ. 41ஆ) போது புன்முறுவல் பூத்தவராக இருந்திருப்பார்.

J.W. மெக்கார்வி அவர்கள் இந்நிகழ்ச்சிகளின் தொடரைப் பின்வரும் வார்த்தைகளின் மூலம் வர்ணிக்கின்றார்:

> "அதிகாரமும் இனிமையும் நிறைந்த குரலுடன், மரித்தவர்களால் கேட்கும்படியான விதத்தில் பேதுரு அந்தக் குளிர்ந்து போயிருந்த சரீரத்தின் அருகில் சென்று, 'தபீத்தாளே, எழுந்திரு' என்று கூறுகின்றார். அவளது கண்கள் திறக்கின்றன, அவள் பேதுருவைப் பார்க்கின்றாள். அவள் அவரை அடையாளம் காண்கிறாளா? அல்லது அவர் அவளுக்கு ஒரு அந்நியராய் இருக்கின்றாரா? அதை நாம் அறியவில்லை. அவள் உட்காருகின்றாள், அவரது முகத்தைப் பார்க்கின்றாள். அவர்களுக்கிடையில் வேறு எந்த வார்த்தைப் பரிமாற்றமும் நடைபெறவில்லை; ஆனால் அவர் தமது கையை அவளுக்கு மெதுவாய்க் கொடுத்து, அவள் எழுந்து நிற்க உதவுகின்றார். அவர் பரிசுத்தவான்களையும், விதவைகளையும் அழைக்கின்றார், அங்கு உள்ளே அவள் தனது வெள்ளைப் பிணத் துணியில் அவர்களுக்கு முன்பாக உயிருடன் நிற்கின்றாள் ... பேதுரு, அழுதவர்களுடன் கூட அழுவதற்கு வந்தார்; அவர் அகமகிழ்வுடன் இருந்தவர்களோடு சேர்ந்து அகமகிழ்ந்தார்."

இதுவரையிலும், கிறிஸ்தவர் ஒவ்வொருவரின் மரணமும்,

தேவனுடைய பிள்ளைகள் எல்லாருக்கும் ஒரு விசேஷப் பாடத்தைக் கொண்டிருந்தது. அப். 5ல் அனனியா, சப்பீராள் ஆகியோரது மரணங்கள், தேவனை ஏளனம் செய்ய முடியா தென்ற கருத்தை நமது இருதயங்களில் பதியச் செய்தன! ஸ்தேவான் கொலை செய்யப்படுகையில் அவர் பெற்றுக் கொண்ட விசேஷ தரிசனமானது, கர்த்தர் தமது பரிசுத்த வான்கள் கொடுமைப்படுத்தப்படும் பொழுது அவர்களை மகிமைப்படுத்த அறிந்திருக்கின்றார் என்பதை வலியுறுத்தின. தொற்காளின் மரணமும், தொடர்ந்து அவளது உயிர்த் தெழுதலும், நாம் நமது அழைப்புக்கு உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருந்தால், நித்தியத்திற்கும் தேவனுடன் இருக்கும் படியாக, நாமும் ஒரு நாளில் உயிர்ப்பிக்கப்படுவோம் என்பதை நமக்கு நினைவு படுத்துகின்றன (1 கொரி. 15:20, 35-38, 42-44, 51-55, 57).

தொற்காளின் வரலாற்றை நாம் கடந்து செல்வதற்கு முன், மூன்று உண்மைகள் வலியுறுத்தப்பட வேண்டும்; முதலாவது, ஐனேயாவைக் குணமாக்குவதைக் காட்டிலும், தொற்காளை உயிர்ப்பித்தல் என்பது பேதுருவுக்குக் கடினமானதாக இருக்க வில்லை. ஐனேயாவைக் குணப்படுத்த ஒரு வசனமே (வ. 34) போதுமானதாயிருந்தது. தொற்காளை எழுந்திருக்கும்படிக் கூறவும் ஒரு வசனமே (வ. 40) போதுமானதாயிருந்தது. சுற்றிலுமிருந்த சமூகத்தில் ஒரே விதமான விளைவுதான் உண்டாயிற்று (வ. 35, 42). ஜிம்மி ஆலன் கீழ்கண்டவாறு கூருகிறார்:

> கண்களைத் திறப்பதற்குத் தேவைப்படும் வல்லமையைக் காட்டிலும் அதிகமான வல்லமை மரித்தோரை உயிர்ப்பிக்கத் தேவைப்பட்டிருக்கவில்லை. பெரிய, நடுத்தரமான மற்றும் சிறிய அற்புதங்கள் என்று புதிய ஏற்பாட்டில் வகைப்படுத்தப் பட்டிருந்ததில்லை. முதல் நூற்றாண்டில் நிகழ்ந்தவை எல்லாமும்-அற்புதங்கள் - என்ற ஒரே தலைப்பின் கீழ்தான் வகைப்படுத்தப்பட்டுள்ளன! அன்று அவர்களிடமிருந்த வல்லமை இன்று மனிதர்களிடத்தில் இருக்குமென்றால், அவர்கள் செய்ததையே இவர்களும் செய்ய முடிபவர்களாய் இருக்க வேண்டும்.

அப்போஸ்தலிக்க வல்லமை தங்களிடம் இருப்பதாகக் கூறிக் கொள்பவர்களிடத்தில், சுவிசேஷ பிரசங்கியார்கள் பல

ஆண்டுகளாக அறைகூவல் விடுத்திருக்கின்றனர்: "எங்களுடன் கல்லறைக்கு வாருங்கள்! நீங்கள் உயிர்த்தெழுப்பும் ஒவ்வொரு நபருக்கும் பதிலாக நாங்கள் இரண்டிரண்டு நபர்களை உயிர்ப்பிப்போம்!"[15] சில நேரங்களில், "மிகவும் தூரத்தில் இருக்கும் இடம் ஒன்றில் ஒரு மனிதர் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டார் என்று நான் கேள்விப்பட்டேன்" என்பது போன்ற உரிமை கோருதல்கள் மேற்கொள்ளப் படுகின்றன, ஆனால் இப்படிப்பட்ட உரிமைகோருதலானது எப்பொழுதும், நிச்சயமற்றதாகவும், உண்மையாவென்று உறுதிப்படுத்திக் கொள்ள முடியாததாகவும் இருக்கின்றது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் பாடத்தை எனக்குக் கற்பித்தவராகிய J.W. இராபர்ட்ஸ் அவர்கள், தொற்காளை உயிர்ப்பித்தது போல ஒருவர் செய்ய முயன்ற நிகழ்ச்சி யொன்றைக் கூறினார். பயணம் செய்கின்ற ஒரு சுவிசேஷக அறிவிப்பாளர் தம்மிடம் அப்போஸ்தலிக்க வல்லமை இருந்த தாகவும், அவைகளை செயல்படுத்திக் காட்ட முடியும் என்பதாகவும் அறிவித்தார். ஒரு சவப்பெட்டி திறக்கப்பட்டு, வெளிரிய உடம்பு ஒன்று வெளிப்படுத்தப்பட்டது. அந்த ஊழியர், "இம்மனிதர் இறந்து மூன்று நாட்களாயிற்று, ஆனால் நான் இவரை உயிரோடெழுப்புவேன்" என்று அறிவித்தார். அப்பொழுது தேவநம்பிக்கையற்ற ஒருவர் அந்த சவபெட்டி யின் அருகில் சென்று, "இறந்த மனிதனைச் சுடக் கூடாது என்று சட்டம் ஒன்றும் இல்லையே, அப்படி ஏதாவது இருக்கின்றதா?" என்று கேட்டுக் கொண்டே ஒரு துப்பாக்கியை எடுத்து நீட்டினார். அந்த "சவமான" மனிதர் சவப் பெட்டியை விட்டுக் குதித்து ஓடி விட்டார்!

இரண்டாவது, குணப்படுத்தப்படுவோம் என்ற விசுவாசம் தொற்காளிடத்தில் இருக்கவில்லை. "விசுவாச குணம் அளிப்பவர்" என்று தங்களைப் பற்றிக் கூறுகின்றவர்கள், தாங்கள் தோல்வியடையும்போது, குணமாகும்படியாக வந்தவர் மீது பழிபோட்டு விடுகின்றனர். ஆயினும், புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில், குணமடைவதற்கு விசுவாசம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை எதுவும் இல்லாதிருந்தது. இந்த நிகழ்ச்சியில் பேதுரு வந்து தன்னைக் குணப்படுத்தி, உயிரோடு எழுப்புவார் என்ற விசுவாசம் எதுவும் தொற்காளிடம் இருந்ததில்லை.

*மூன்றாவது, மிக முக்கியமானது என்னவென்றால், தொற்காளை உயிரோடெழுப்பியது இந்த வரலாற்றின் உச்சக் காட்சியாகி விடவில்லை. அற்புதங்களோடு என்றைக்கும் எந்த வரலாறும் முடிவடைந்து விடாமல், அற்புதங்கள் முடிவை நோக்கி வழி நடத்துகின்றவைகளாய் இருக்கின்றன. ஐனேயா குணமானார் அல்லது தொற்காள் உயிரோடெழுந்தாள் என்பது 9ம் அதிகாரத்தின் உணர்வுப் பூர்வமான செய்தியாயிராமல், ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டன என்பதே உணர்வுப் பூர்வமான செய்தியாய் இருக்கின்றது! தொற்காள் உயிரோ டெழுப்பப்பட்டாள் என்ற செய்தியானது, "யோப்பா பட்டணம் எங்கும் தெரிய வந்தது. அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்" (வ. 42).[16] சரீரத்தில் மரித்தவர்களை எழுப்புவதைக் காட்டிலும், ஆவியில் மரித்தவர்களை எழுப்புவதே மிகவும் முக்கியமானதாயிருக் கின்றது! இரட்சிப்பு என்பது அற்புதங்களைக் காட்டிலும் மிகவும் முக்கியமானதாயிருக்கின்றது, ஏனெனில், "இரட்சிப்பு மாபெரும் விலைக் கிரயம் கொண்டு வாங்கப்பட்டது ... அது மாபெரும் விளைவுகளை உண்டாக்குகின்றது ... அது தேவனுக்கு மாபெரும் மகிமையைக் கொண்டு வருகின்றது" என்று வாரன் வயர்ஸ்ப் கூறியிருக்கிறார்.*

## தோல் பதனிடும் ஒருவர் தம்மிடம் இருந்தவற்றைப் பயன்படுத்தினார் (9:43)

*சமூகத்தினரின் சாதகமான பதில்செயலானது ஆத்துமாக் களின் விளைச்சலை அறுவடை செய்யும்படி அதிக நாட்கள் யோப்பாவில் தங்கியிருக்குமாறு பேதுருவைத் தூண்டியது. ஆகவே, லூக்கா இந்த அதிகாரத்தை, "பின்பு அவன் யோப்பா பட்டணத்திலே தோல் பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்தில் அநேக நாள் தங்கியிருந்தான்" என்று முடித்தார் (வ. 43). அடுத்த அதிகாரத்தில் கொர்நேலியுவுக்குத் தரப்படப் போகின்ற, "... பேதுரு என்று மறு பேர்கொண்ட சீமோனை அழைப்பி, அவன் தோல், பதனிடுகிறவனாகிய சீமோன் என்னும் ஒருவனிடத்திலே தங்கியிருக்கிறான்; அவனுடைய வீடு கடலோரத்திலிருக்கிறது ..." (10:5, 6) என்ற அறிவுரையை எதிர்பார்த்து, பேதுருவின் முகவரியை முன்னதாகவே*

தருகின்றார்.

பெரும்பாலும் இருப்பதுபோல, சீமோனின் தொழிற் கூடமானது அவன் வசிக்கும் இடத்திற்கு அருகில் இருந்த தென்றால், சீமோனின் வீடு கடலோரத்தில் இருந்திருக்க வேண்டும், ஏனென்றால் தோல்பதனிட அவர் கடல் நீரைப் பயன்படுத்தியிருக்கலாம் அல்லது தோல் பதனிடுதல் என்பது துர்வாடை அடிக்கும் செயல்முறையாக இருந்தது என்பதால் அவர் வீடு கடலோரத்தில் இருந்திருக்கலாம். ஆயினும், அப். 10 மற்றும் 11ல் நடக்க விருக்கும் நிகழ்ச்சிகளை முன் அனுமானித்து லூக்கா மேலான சிலவற்றைக் கூறுகின்றார். யூதர்கள் சீமோனின் அருகில் வாழ்வதற்கு விரும்பவில்லை என்பதால் சீமோனின் வீடானது மற்ற வீடுகளிலிருந்து தனிமைப் படுத்தப்பட்டுக் கடலோரத்தில் இருந்திருக்கலாம். தோல் பதனிடுதல் ஒரு தொழில் என்றே பெரும்பாலான யூதர்கள் கருத மாட்டார்கள். விலங்குகளின் தோல்களுடன் அதைப் பதனிடு பவர் செய்யும் வேலையானது சடங்காச்சாரத்தின்படி அசுத்த மான வேலையாகக் கருதப்பட்டது (லேவி. 11:35-40ஐக் காணவும்). மேலும், பெரும்பாலான யூதர்கள், தோல் பதனிடும் ஒருவருடன் தங்கியிருப்பதைக் கனவில் கூட நினைக்க மாட்டார்கள். சீமோன் தோல்பதனிடுபவராக இருந்தும் கூட கிறிஸ்தவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார் என்ற உண்மையும்[17] - பேதுரு அவருடைய வீட்டில் தங்கியிருக்க விரும்பினார் என்ற உண்மையும் இணையும்போது - அடுத்த இரண்டு அதிகாரங் களில் சித்தரிக்கப்படும் நடக்கையில் மாறுதல்களுக்கு முன் நிழலாட்டமாக இது தரப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகின்றது.

நாம் அதிகாரம் 9 ஐக் கடந்து செல்வதற்கு முன்பு, அது, நமது பாடத்தின் முக்கிய கருத்தை எவ்விதம் விளக்குகிறதென்று கவனிப்போம். பின்வருவது போன்ற காட்சியைக் கற்பனை செய்யுங்கள்: தொற்காள் உயிரோடு எழுப்பப்பட்ட பிறகு, பேதுரு ஒரு புறமாக நின்று கொண்டு, அங்கு நடந்த கொண்டாட்டத்தைக் கவனித்துக் கொண்டு, இந்த இரவை எங்கு கழிக்க வேண்டியதிருக்கும் என்று சிந்தித்துக் கொண்டி ருந்தார். கடைசியாக, நெடியுள்ள உடையணிந்து, பழைய தோல் போல் நிறம் கொண்ட தோலுடைய, ஒரு மனிதர் தயக்கத்துடன் பேதுருவின் அருகில் வந்தார். அவர், "இன்றிரவு

நீங்கள் தங்குவதற்கு இடமொன்றும் இல்லையென்றால், எங்கள் வீட்டில் ஒரு காலியறை இருக்கின்றது" என்றார். பேதுரு அதற்குப் பதில் கூறுமுன்பு, மேலும் அவர் அவசரமாக, "நீங்கள் வரவிரும்பவில்லை என்றாலும், அதற்கு நான் வருந்த மாட்டேன் - எனது உணர்வுகள் பாதிக்கப்படாது - நான் தோல் பதனிடுபவன், எனது வீடு கடலோரத்தில் இருக்கின்றது'' என்றும் கூறினார். பேதுரு புன்சிரிப்புடன், ''நான் ஒரு மீனவனாயிருந்தவன், நான் கடலை மிகவும் விரும்புகிறேன். உங்கள் விருந்தாளியாய் இருப்பதென்பது எனக்கு மிகவும் மதிப்பிற்குரிய செயலாகும்!" என்று கூறினார். இவ்விதமாக அவர் "அநேக நாட்கள்" சீமோனுடன் தங்கியிருந்தார்.

''கர்த்தருக்கென்று பயன்படுத்த என்னிடம் ஒன்றும் இல்லை" என்று சீமோன் சுலபமாய்ச் சொல்லியிருக்க முடியும். அவருடைய வீடு ஒன்றிருப்பதை யாரேனும் அவருக்கு நினைவு படுத்தியிருந்தால், அவர், "என்ன, கேலி பண்ணுகிறீர்களா? என் வீடு நாற்றமடிக்குமே! யார் அங்கு வந்து தங்குவதற்கு விரும்புவார்கள்?" என்று பதில் கூறியிருக்கலாம். ஆயினும், தோல் பதனிட்டவர் தம்மிடம் உள்ளது எதுவோ - அது எவ்வளவு தாழ்மையானதாயிருந்தாலும் - அது தேவனிடம் இருந்து வந்த பரிசு என்று உணர்ந்து, அதை அவருக்கென்று பயன்படுத்தவும் விரும்பினார். உபசரிப்பின்[18] முக்கியத் துவத்தை உணர்ந்த சீமோன், தம்மிடம் இருந்தவற்றைத் தாம் செய்ய முடிந்த செயல்களுக்குப் பயன்படுத்தினார்.

## முடிவுரை

இதை நாம் முடிக்கையில், நமது பாடத்தைச் சுருக்கிக் கூற ஒரு நிமிடம் எடுத்துக் கொள்வோம்:

முதலாவது, தேவன் நம் ஒவ்வொருவருக்கும் நேரம், சக்தி, திறமைகள் மற்றும் உடமைகள் ஆகியவற்றைக் கொடுத்திருக் கின்றார். பேதுருவுக்குத் தரப்பட்டது போல் விசேஷித்த வகையில் காட்சிக்குரியதாகவோ அல்லது இரண்டு மனுஷர் கள், தொற்காள் மற்றும் சீமோன் ஆகியோருக்குத் தரப்பட்டது போல தாழ்மையானதும், கருதப்படாததுமாகவோ தேவனு டைய வரங்கள் இருக்கலாம். "உங்களிடத்தில் என்ன இருக்கின் றது?" என்பதைப் பற்றிய கணக்கெடுத்தலானது நீங்கள் செய்யக்

கூடியவற்றிலேயே மிகவும் நல்லதொரு பயிற்சியாகும். தோல் பதனிடும் சீமோனை மனதில் கொண்டு, துர்வாடையுள்ள ஒரு வீடு, துருப்பிடித்துப் போன ஒரு கார் அல்லது தாழ்மையான ஒரு வேலை ஆகிய எவற்றையும் பட்டியலிடத் தவற வேண்டாம்!

இரண்டாவது, பேதுரு, இரண்டு மனிதர்கள், தொற்காள் மற்றும் சீமோன் ஆகியோரைப் போலவே - நம்மிடத்தில் இருப்பவற்றை நம்மால் செய்யக் கூடிய செயல்களில் பயன்படுத்தத் தேவன் எதிர்பார்க்கின்றார். நியாயத்தீர்ப்பு பற்றிய இயேசுவின் உவமைகள் ஒன்றில், தனது தாலந்தைப் பயன்படுத்தத் தவறிய ஒரு மனிதன் "பொல்லாதவன்" என்றும் "சோம்பன்" என்றும் அழைக்கப்பட்டான் (மத். 25:26)!

மூன்றாவது, நம்மிடத்தில் இருப்பவற்றை, நம்மால் செய்ய முடிந்த செயல்களில் நாம் பயன்படுத்தினால், நமது வேதபாடப் பகுதியில் வருபவர்களின் முயற்சிகளை ஆசீர்வதித்தது போலவே, தேவன் நமது முயற்சிகளையும் ஆசீர்வதிப்பார். கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கின்ற ஒவ்வொருவரும் தங்களிடம் இருப்பவற்றைத் தங்களால் செய்ய முடிந்த செயல்களில் பயன்படுத்தினால், நாமும் கூட, சமுதாயத்தில் உள்ளவர்கள் யாவரும் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்துடன் கர்த்தரிடத்திற்குத் திரும்புவதைக் காணுவோம்.

## காட்சி-உதவிக் குறிப்புகள்

"உங்களிடத்தில் இருப்பவற்றை உங்களால் செய்யக் கூடிய செயல்களில் பயன்படுத்துங்கள்" என்ற திறவுகோல் சொற்றொடரானது மறுபடி மறுபடி கூறப்படுகின்றது. உங்களின் பிரசங்கத்தைக் கேட்பவர்களின் மனங்களில் இந்தச் சிந்தனையைப் பதிய வைப்பதற்காக, ஒரு மின் அட்டையில் அல்லது கரும் பலகையில் இந்த சொற்றொடரை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். பாடத்தில் இந்தச் சொற்றொடர் உள்ள இடத்திற்கு நீங்கள் வரும் ஒவ்வொரு முறையும், மின் அட்டையை உயர்த்திப் பிடியுங்கள் (அல்லது கரும்பலகையில் அந்த வார்த்தைகளைச் சுட்டிக் காட்டுங்கள்), மற்றும் உங்கள் பிரசங்கத்தைக் கேட்பவர்கள் உங்களுடன் சேர்ந்து இந்த வார்த்தைகளை

உச்சரிக்கும்படி செய்யுங்கள். பாடத்தின் முடிவில், மின் அட்டையைத் திருப்பிப் பிடியுங்கள் (அல்லது கரும்பலகையில் மறைத்து வைத்த பகுதியை வெளிக் காட்டுங்கள்) - அதில் உள்ள ‘‘தேவன் உங்கள் முயற்சிகளை ஆசீர்வதிப்பார்!’’ என்ற வார்த்தைகளை வெளிப்படுத்துங்கள்.

## பிரசங்கக் குறிப்புகள்

*நிக் ஹாமில்ட்டன் அவர்கள் 9:32-43 ஐப் பற்றி, “அவர்கள் கர்த்தரிடம் திரும்பினார்கள்” என்ற தலைப்பில் இயற்றியிருந்த பிரசங்கமானது The Preacher's Periodical,* November *1986 இதழில் வெளியாயிற்று. அவர் (1) பேதுரு வல்லமைக்காகக் கர்த்தரிடம் திரும்பினார், (2) சீஷர்கள் ஆறுதலுக்காகக் கர்த்தரிடம் திரும்பினார்கள், மற்றும் (3) மக்கள் இரட்சிப்புக்காகக் கர்த்தரிடம் திரும்பினார்கள் என்ற கருத்துக்களை வலியுறுத்தினார்.*

C. *புரூஸ் ஒயிட் அவர்கள்* “h” *என்று தொடங்கும் மூன்று வார்த்தைகளான* (1) Healing, (2) Helping, and (3) Heralding. *ஆகியவற்றைக் கொண்டு 9:32-43 வசனப்பகுதியைச் சுருக்கிக் கூறினார். “முதல் நூற்றாண்டு உபசரிப்பு” என்ற தலைப்புடைய அவரது பிரசங்கம் The Preacher's Periodical,* April *1987 இதழில் வெளியாயிற்று.*

*புதிய ஏற்பாட்டில் பல நிகழ்ச்சிகள் ‘‘மேல் வீட்டில் நடந்துள்ளன.’’ ‘‘மேல் வீடு’’ என்ற பாடத்திற்கு இந்த நிகழ்ச்சிகள் தொடக்கக் கருத்தாயிருக்கலாம்: (1) இராப் போஜனத்தின் மேல் வீடு* (The Upper Room of Communion) *(மாற். 14:15; லூக். 22:12); (2) தோழமையின் மேல் வீடு* (The Upper Room of Companionship) *(அப். 1:13); (3) ஆறுதலின் மேல் வீடு* (The Upper Room of Comfort) *(அப். 9:37); (4) செய்தித் தொடர்பின் மேல் வீடு* (The Upper Room of Communication) *(அப். 20:8). நாம் அனைவரும் நமது வாழ்க்கை முறைகளில் இவ்விதமான “மேல் வீடுகளை” க் கட்ட வேண்டியது தேவையாகும்.*

## குறிப்புகள்

[1]இயேசு தமது ஆடுகளை மேய்க்கும் கட்டளையைப் பேதுருவுக்குக் கொடுத்திருந்தார் (யோவா. 21:15-17). பேதுரு சென்ற இடங்களில் எல்லாம் ஏற்கனவே கிறிஸ்தவர்கள் இருந்ததால் அக்கட்டளை இந்தப் பிரயாணத்தின் பகுதி நோக்கமாக விளங்கிற்று எனலாம். இதே போன்ற மற்ற சில பயணங்களை 14:21-23; 15:36ல் காணவும். [2]சாரோன் என்பது அப்பகுதியில் புகழ் பெறாத கிராமம் ஒன்றின் பெயராய் இருப்பதற்கும் வாய்ப்புள்ளது. ஆனால் சாரோனின் சமவெளி எல்லாரும் அறிந்ததாயிருந்தது. அந்தப் பகுதி முழுவதிலும் இருந்தவர்கள் யாவரும் என்ன நடந்திருந்தது என்பதை அறிந்தார்கள் என்பதை லூக்கா வலியுறுத்தினார். இவ்வாறு அவர்கள் அறிந்திருந்த செயல்தான் தொற்காள் மரித்தபோது இரண்டு மனுஷரை அனுப்பிப் பேதுருவை அழைத்து வரும்படி கூறுவதற்குச் சகோதரரைத் தூண்டியது. [3]"கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்" என்று வசனம் 42ல் உள்ள வார்த்தைகள், வசனம் 35ல் உள்ள, "கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்" என்ற வார்த்தைகளுக்குச் சமமானவை என்பது தெளிவாய்க் காணப்படுகின்றது. [4]இயற்கைக்கு மாறான மரணம் பற்றிய இரண்டு விபரக் குறிப்புகள் இதற்கு முன் நமக்குத் தரப்பட்டிருந்தன: அனனியாவும் சப்பீராளும் தேவனால் அடிக்கப்பட்டு மரித்தார்கள், ஸ்தேவான், யூதக் கூட்டத்தினால் கொலை செய்யப்பட்டார். [5]அடக்கத்திற்குத் தயார் செய்வதில், சரீரத்தைக் குளிப்பாட்டுதல், வாசனைப் பொருட்கள் தடவுதல் ஆகியவையும் உள்ளடங்கியிருந்தது. சரீரம் குளிப்பாட்டப் பட்டது பற்றி மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளதால், அவர்கள் பேதுரு வந்து தொற்காளை எழுப்புவார் என்று எதிர்பார்த்து, அடக்கத்திற்குத் தயார் செய்யாம லிருந்தார்கள் என்று யூகித்துள்ளனர், ஆயினும், "அவளைக் குளிப்பாட்டி" என்ற வார்த்தைகள் சவ அடக்கத்திற்குத் தேவையான எல்லா செயல்களும் செய்யப் பட்டிருந்தன என்றே புரிந்து கொள்ளப்பட வேண்டியதாயிருக்கின்றன. [6]துன்பமும், வேதனையும் அதிகமாயிருந்ததால் பேதுரு தாமதமில்லாமல் வரவேண்டும் என்று அவர்கள் அவசரப் படுத்தியிருக்கலாம், ஆனால் "தாமதமில்லாமல்" என்ற சொற்றொடரானது, தொற்காளை அடக்கம் பண்ணும்படி வற்புறுத்தப்படுவதற்கு முன்னதாகப் பேதுரு அங்கு வர வேண்டும் என்று விரும்பினார்கள் என்ற கருத்தை குறிப்பதாக இருக்கின்றது என்பதே தகுதியானதாகும். [7]இயேசு பலமுறை, மரித்தோரை எழுப்பியிருந்திருக்கின்றார், ஆனால் இந்நிகழ்ச்சி நடைபெறும் வரையிலும், இதற்கு முன் அப்போஸ்தலர்கள் யாரும் இம்மாதிரி செயல் செய்திருக்கவில்லை. இந்நிகழ்ச்சிக்குப் பிறகு, அப்போஸ்தலர்களில் ஒருவர், மரித்தவனை மறுபடியும் உயிரோடெழுப்பியதான நிகழ்ச்சி இன்னொன்று அப். 20:9-12ல் பதிவாகி உள்ளது. [8]புதிய ஏற்பாடு எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் எல்லா கிறிஸ்தவர்களும் அற்புத வல்லமைகளைப் பெற்றிருந்ததாகச் சிலர் கூறுகின்றனர். இதற்கு முரண்பாடான வகையில் பல ஆதாரங்களை இதுவரையிலும் நமது பாடத்தில் பார்த்திருக்கின்றோம், மற்றும் இப்பாடத்தின் வேதபாடப் பகுதியும் கூட, சராசரி கிறிஸ்தவ உறுப்பினரிடம் இல்லாத வல்லமையானது அப்போஸ்தலர்களிடம் இருந்ததை உறுதிப்படுத்துகின்றது. மற்றவர்களால் ஐனேயாவைக் குணப்படுத்தியிருக்க முடியுமென்றால், பேதுரு வருமுன்னர் அதை அவர்கள் நிச்சயமாய்ச் செய்திருப்பார்களே! யோப்பாவிலிருந்த சகோதரர்களும் பேதுருவுக்கு ஆள் அனுப்பியிருக்கத் தேவையில்லையே! [9]இது மனங்கலங்கச் செய்யும் ஒரு காட்சியாகும். இயேசுவைப் போலவே பேதுருவும் கண்ணீர் விட்டிருப்பார் என்று நான் கற்பனை செய்கின்றேன் (இ.வ. யோவா. 11:35). [10]பேதுரு ஐனேயாவைக் குணப்படுத்திய போது, இயேசுவே அதைச் செய்தார் என்று வலியுறுத்தினார் (9:34). மரித்தோரை உயிரோடே எழுந்திருக்கப் பண்ணியதில்

*பேதுரு, இயேசுவின் செயல்பாட்டை அப்படியே கடைப் பிடித்ததென்பது, இதே சிந்தனையை வலியுறுத்துவதாக இருக்கலாம்: தொற்காளை உயிரோடே எழுப்பியது பேதுரு அல்ல, ஆனால் இயேசுவே அவ்வாறு செய்தார்.*

*[11]எலியா, எலிசா ஆகியோர் மரித்தோரை உயிரோடு எழுப்பிய போது நடந்த சில ஆர்வமுள்ள இணை நிகழ்ச்சிகளையும் நாம் காண்கின்றோம் (1 இரா. 17:17-22; 2 இரா. 4:32-35). [12]மாற். 5:40; லூக். 8:51. ஒவ்வொருவரையும் வெளியே அனுப்பியதன் நோக்கம் இயேசு மற்றும் பேதுரு ஆகியோருக்கு வேறுபட்டவை களாயிருக்கலாம். இயேசு அற்புதத்தைப் பிரசித்தப் படுத்த விரும்பவில்லை (மாற். 5:43; லூக். 8:56). ஆனால் மக்கள் அறிந்து கொள்வதைப் பற்றிப் பேதுரு கவலைப்பட வில்லை (9:42). [13]புதிய ஏற்பாட்டின் மற்ற எல்லா அற்புதங்களையும் போலவே, இதுவும் உடனடியானதாக, முழுமையானதாக, நம்பக் கூடியதாக இருந்தது. [14]"பரிசுத்தவான்களையும், விதவைகளையும்" என்ற சொற்றொடரானது அங்கிருந்த விதவைகளில் யாரும் பரிசுத்தவான்களாயிருந்ததில்லை (கிறிஸ்தவர்களாயிருந்த தில்லை) என்று அர்த்தமாக அவசியமில்லை. குறைந்த பட்சம் அவர்களில் சிலர் கிறிஸ்தவர்களாயிருந்திருக்கவில்லை என்பதை இது குறிப்பிடுகின்றது. அநேகமாக கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவரல்லாதவர்கள் ஒவ்வொருவருக்கும் தொற்காள் உதவியிருக்க வேண்டும் (கலா. 6:10). சிலர் கிறிஸ்தவர்களல்ல என்றால், வசனம் 42ல் குறிப்பிடப்பட்டவர்களில் அவர்கள் இருந்திருப்பார்கள். அவர்கள், தொற்காள் உயிரோடு எழுப்பப்பட்டதால் "கர்த்தருக்குள் விசுவாசமுள்ளவர்களாக" ஆனார் கள். [15]இதன் ஒரு மாறுபாடான அறைகூவலாக, "சவ அடக்கம் செய்வோரிடத்திற்கு என்னுடன் வாருங்கள்'' என்ற கூற்று உள்ளது. இன்னொரு மாறுபாடான அறைகூவலாக, "இது நடக்கும் போது, இதை நடப்பித்தவர் உண்மையிலேயே அப்போஸ்தலிக்க வல்லமையைப் பெற்றுள்ளார் என்று நான் நம்புவேன்" என்பது வலியுறுத்தம் பெறுகின்றது. [16]"கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்" (வ. 35) என்ற சொற்றொடரும், "கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்" (வ. 42) என்ற சொற்றொடரும் ஒரே அர்த்தமுடையவைகளாகவும், கர்த்தரிடம் விசுவாசிக்கும் ஒருவர் மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும் (2:37, 38) மனந்திரும்பு தலுக்கான செயல் முறையைச் சுருக்கமாய்க் கூறுவதாகவும் இருக்கின்றது. [17]கிறிஸ்தவரல்லாதவரோடு தங்கியிருப்பதைக் காட்டிலும், கிறிஸ்தவரோடு தங்கியிருப்பதையே பேதுரு விரும்பினார். [18]ரோமர் 12:13; 1 தீமோ. 3:2; 5:10; எபி. 13:2; 1 பேது. 4:9 ஆகியவற்றைக் காணவும்.*

## ஆசிரியரிடமிருந்து ஒரு குறிப்பு

எருசலேமிலிருந்த ஆலய வளாகத்தில், புறஜாதியாரின் மண்டபத்திலிருந்து, பரிசுத்த மண்டபங்களுக்குச் செல்லும் நடை பாதையின் நுழைவாயில் ஒவ்வொன்றிலும், கிரேக்க மொழியில் பெரிய எழுத்துகளில் எழுதப்பட்ட பின்வரும் எச்சரிப்பானது காணப்பட்டது:

> தேவாலயத்தைச் சுற்றிலும் உள்ள வேலி மற்றும் மூடப்பட்ட பகுதிகளைக் கடந்து புறஜாதி நாட்டைச் சேர்ந்த எந்த மனிதரும் உள்ளே நுழையக் கூடாது, அப்படி நுழைந்த தாகக் கண்டுபிடிக்கப்படும் எவரும், தமக்கு விதிக்கப்படும் மரண தண்டனைக்கு தாமே பொறுப்பாவார்.

பல வருடங்களாக, புறஜாதியார் மண்டபத்தினுள் வரும் யூதரல்லாத ஒருவர் அந்த எச்சரிக்கையைப் படித்திருந்தார். ஒரு நாள் அவர் அம்மண்டபத்திற்கு வருகையில், அந்த அறிவிப்புகள் யாவும், பின்கண்டவாறு மாற்றப்பட்டிருப்பதாகக் கண்டு அவைகளைப் படிக்கிறார் என்று கற்பனை செய்து பாருங்கள்:

> **புறஜாதியாரே, வருக!**

அவருடைய ஆச்சரியத்தையும் - மற்றும் யூதர்களின் திகைப்பையும் - நீங்கள் கற்பனை செய்ய முடிந்ததென்றால், இந்த இதழில் நாம் கண்ட அப். நட. பாடங்களில் நடந்தவற்றை நீங்கள் மதிப்பிட முடியும்.

தேவன் தமது நித்திய திட்டத்தில் புறஜாதியாரை ஒரு பாகமாக வைக்கவே எப்பொழுதும் விரும்பியிருந்தார் (ஏசா. 62:2). இயேசு, “இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் (அதாவது யூத நாட்டாரல்லாமல்) வேறே ஆடுகளும் எனக்கு

உண்டு" (யோவா. 10:16) என்று கூறியிருந்தார். பிரதான கட்டளையானது "சகல தேசத்தாரையும்" மற்றும் "சர்வ சிருஷ்டியையும்" (மத். 28:19; மாற். 16:15) உள்ளடக்கியதா யிருந்தது. இருந்த போதிலும் கூட, கிறிஸ்தவமானது விருத்த சேதனமுள்ளவர்களை அணைத்துக் கொண்டது போல, விருத்தசேதனமற்றவர்களையும் அணைத்துக் கொள்ள முடியும் என்பதை இயேசுவின் சீஷர்கள் புரிந்து கொள்வதற்கு தேவனிடமிருந்து வல்லமையுள்ள செயல் விளக்கங்கள் தேவைப்பட்டன.

தேவனால், புறஜாதியாருக்கு அப்போஸ்தலராகத் தேர்ந்து கொள்ளப்பட்ட பவுலின் மனமாற்றம் பற்றிய பாடங்கள் இரண்டை இந்த இதழில் நாம் பெற்றுள்ளோம்; புறஜாதியார் முதன்முதலாக மனமாற்றமடைந்தது பற்றிய பாடங்கள் இரண்டும் இதில் நாம் பெற்றுள்ளோம், இடையில், பவுலின் மனமாற்றத்தைத் தொடர்ந்து நடந்தவைகள் பற்றிய மூன்று பாடங்களும், கொர்நேலியு மற்றும் அவரது வீட்டார் மனமாறியது பற்றிய அறிமுகமும் நாம் பெற்றுள்ளோம். அப். நடபடிகளில் பரிசுத்த ஆவியானவரின் கிரியை பற்றிய துணைப்பாடம் ஒன்றையும் நாம் பெற்றுள்ளோம்.

யூதரல்லாதவராக நீங்கள் இருந்தால் (நமது வாசகர்களில் 90 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் இப்படிப்பட்டவர்களே), பரலோகத்தின் அந்த அறிவிப்பு இப்பொழுது, "புறஜாதியாரே வருக!" என்று இருப்பதற்காக அகமகிழ்ந்து களிகூருங்கள்!